ஓலை 144| ஓசை 267| செப்டம்பர் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## சோமசுந்தர பாரதியார்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்

## பொருள்

வரும் துன்பத்திற்குத் துன்பப்படாத மன ஊக்கம் உள்ளவர். துன்பத்திற்குத் துன்பம் தருவர்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## புலையுங் கொலையுங் களவும் தவிர்!

**பாவகை : கலித்துறை**




இடியும் மின்னலும் புயலுடன் இணைந்துமே மாந்தர்
அடிமை இனமென அலறிட மரக்கறி போல,
துடித்தே துவண்டிட கொலையுமே செய்துதான் களவால்
நடித்தே தின்னுதல் போலவே செய்வதா மாந்தர்?

மாந்தர் கறியுடன் மரக்கறி வேற்றுக் கறியும்
மாந்தும் பாங்கிலே கொன்றுதான் களவுமே செய்து
நீந்தி நீரினில் மிதந்திட தின்பதோ ஆறும்?
மாந்த மின்றியே ஆறென மறப்பதோ அறத்தை?

அன்பை அறத்தினை நல்வினைப் பயனையும் மறந்தே
துன்புறுத்தியே பிறவுயிர் கொன்றுமே களவும்
பொன்னும் பொருளினில் செய்துமே பிழைக்க
நன்றாய் நான்மறை கற்றுதான் பயனது மில்லை!




பிறரைத் தாமென தன்னையும் பிறரென எண்ணி
அறத்தைப் போற்றியே தீச்செயல் மூன்றினை ஒழித்தே
மறவம் தனிலுமே அறவழிப் போற்றிய இனமாம்
சிறந்த தமிழினம் தம்மிலே தீவினைச் செயலேன்?

தன்னின் வினையுமே தன்னையும் சுடுமெனும் குறளார்
சொன்ன அறவினை மறத்தலோ தன்னையே தானும்
கொன்றுத் தின்றிடும் பாங்கென அமைந்திடும் உணர்வாய்;
என்றும் தீவினை மூன்றினை மறத்தலே இன்பம்!

### இலக்கணக் குறிப்பு:

கலித்துறைப் பாக்களில் வேறொரு வாய்பாட்டில் ஒவ்வோரடியின் ஐந்து சீர்களும் மா, விளம், விளம், விளம் மா என்னும் வாய்பாட்டில் ஈரசைச் சீர்களாக, ஒவ்வோரடியிலும் ஓரெதுகைக் கொண்டு, அமைந்த கலித்துறைப் பாடல்களே மேலே உள்ளவை.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

பாவகை : நிலைமண்டில ஆசிரியப்பா

அன்பை நீக்கி ஆணவம் மிகுத்தே
வன்சொல் பேசி வாட்டம் தந்தே
தன்னலம் நிறைத்தே தப்பைச் செய்தே
நன்னயம் விரும்பா நச்சுச் செய்கை
மப்புடன் திரிந்திட மயக்க வாழ்வும்
தப்பைச் செய்தலும் தடங்கலைத் தருமே.



கவிஞர் செ. கலைவாணி

# மனிதரில் எத்தனை குணங்கள்



மனிதர்க்கு மாறுபட்ட குணங்கள் உண்டாம் ;
மகிழ்ச்சிக்கும் துயருக்கும் இதுவே வேராம் !

இனிமைதரும் குணங்கள்நற் பெயரைச் சேர்க்கும் ;
எதிர்ப்பினையே கொண்டிருந்தால் பகைமை முளைக்கும் !

கனிந்திட்ட மனத்திற்கு அறமே காவல் ;
கட்டுப்பா(டு) ஒழுக்கமுமே ஏற்றம் கொடுக்கும் !

குனிவுதரும் இழிகுணமாய் பொருந்தாக் காமம் ;
கொள்கைமாறின் பெயர்புகழ் கெட்டே அழியும் !

எதிர்மறையாம் குணங்களுமே மனத்தில் உண்டு ;
இருவேறு சூழலிலே இரண்டும் மலரும் !

கொதித்திட்ட சீற்றத்தால் சொற்கள் மாறும் ;
கோயில்மா லைஅணிந்தால் சாமி சரணம் !

மதித்திட்ட மக்களிடை மகானாய்ப் பேச்சு ;
மறுதலித்து கேள்விகேட்டால் நாறும் சொற்கள் !

துதித்தாலும் மிதித்தாலும் உண்மை வெல்லும் ;
துள்ளாதே தீதினைசொல் லாதே என்றும் !

கவிஞர் ஆ.சி.கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# உன் மீதான காதல்

அம்மாவின் அன்புச் சங்கிலி அறுபட்டது
பள்ளியின் தாலாட்டு கேட்ட கொஞ்ச காலத்தில்.
வாலிபக்கரங்கள் வலுவானபோது
அப்பாவின் அறிவுப் பாலமும்
மூழ்கத் தொடங்கியது.
மழலையாகவும் மாற முடியாமல்
முழுமையென வாழவும் முடியாமல்
அன்பின் கருணை வேண்டி
இதயம் ஏங்கிய இளமைக்காலத்தில்
நீ எதிரில் வந்தாய்.
அழுத்தும் எல்லா நினைவுகளிலும்
உன் முகம் பதிய
உள்ளிழுக்கும் உயிர்க் காற்றில்
உன் வாசம் மிதக்க.
பயணங்களின் தேடல்களில்
உன் பாதை பார்க்கும்
ஒவ்வொரு அழகிலும்
உன் உயிர்ப்பூ மலர
கேட்கும் ஓசைப்பரிமாற்றங்களில்
உன் பரிமாணம் எதிரொலிக்க.
இசைக்கும் உயிர்த் துடிப்புகளில்
உன் மொழி ஓசையென உருமாற.
என் இயக்கத்தின் உயிர் மூச்செனு
உன் மீதான காதல்
அசைந்து கொண்டிருக்கிறது.



மடி சாய்த்து மனம் பேச
தலை கோதி தாலாட்டவும்
வழிகூறி சிகரம் வாங்கவும்
நீ மட்டும் திரும்பிப் பார்ப்பாய் என்ற
நம்பிக்கையில் ஒட்டிக் கொள்கிறது
உன் மீதான காதல்.

கவிஞர் இளையவன் சிவா

# தீப ஒளி திருநாள்



மத்தாப்பாய் மகிழ்ந்திடவே
மனமிங்கு ஏங்குது
மனங்களிலே அறியாமை
இருள்தானே தூங்குது

அறியாமை அகற்றிடவே
கல்விதீபம் ஏற்றுது
ஆண்டவனாய் ஆசானை
அன்புள்ளம் போற்றுது

தீபத்தால் இருலெள்ளாம்
அகன்றுதானே ஓடுது
திருநாளை தினமென்னி
மனமிங்கே தேடுது

பட்டாசாய் படபடத்தே
துன்பமெல்லாம் நீங்குது
பலகாரம் பகிர்ந்தேதான்
பண்புகளும் ஓங்குது

தித்திப்பாய் இனித்தால்தான்
வாழ்வுமிங்கு ருசிக்குது
திகட்டாமல் இருந்தால்தான்
உறவுகளும் ரசிக்குது

புத்தாடை போலமனம்
எண்ணங்களை பூணுது
புத்தாக்க சிந்தனைகள்
பொலிவுடனே தோனுது

இல்லாமை இயலாமை
இவையெல்லாம் ஓடணும்
எல்லார்க்கும் எல்லாமும்
என்றுமே கூடணும்

இன்றுபோல் எந்நாளும்
இறைவனும் மாற்றனும்
எந்நாளும் மனங்களிலே
மகிழ்ச்சி மட்டும் பார்க்கணும்

கவிஞர் பொன். சுரேஷ், கழனிவாசல்

# புரிதல்

எதுவாயினும்
தக்க நேரம்
தலை காட்டும்போதே
துளிர் விடும்

வற்புறுத்தி வதைத்திட முடியாது
அதன் வருகை எப்போதோ!
அந்நேரங்களில் மாத்திரமன்றி
வேறெந்த நொடிப்பொழுதுகளிலும்
சங்கமிப்பதில்லை



காலவோட்டங்களின்
சுழற்சி வட்டங்களில்
என்றோ வார்க்கப்பட்ட
விதிகளேதும்
விலை பேசப்படுவதில்லை
என்பதை புரிவதுதான்
எப்போது?

கவிஞர் ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான், புல்மோட்டை (இலங்கை)

# வழி மேல் விழி

அறைகள் முழுக்க
ஆங்காங்கே
இறைந்து கிடக்கிறது
பொம்மைகள்
ஒவ்வொரு
பொம்மைக்கும்
ஒவ்வொரு
கதை சொல்லி
விளையாடிய பேத்தி
இன்று
ஊருக்கு சென்று விட்டாள்
தினம் தினம்
அலமாரியில்
பத்திரப்படுத்தப்பட்ட
பொம்மைகள் தான்
ஆனாலும்
எடுத்து வைக்க
மனமில்லாமல்
கதைத்த கதைகளை
ஏந்தியவாறு
மனசு கணத்து
தேங்கி நிற்கிறது
வழி மேல்
விழி வைத்து
காத்துக்கிடக்கிறது கண்கள்
மீண்டும்
அவள் வருகைக்காக.



கவிஞர் இளங்கோவன் மணியன், திருச்சி

# விடாய் கொண்டு

வனம் முழுவதும் தூயவளி போல்
மனம் முழுவதும் உன் ஒளி

வானம் பூராவும் மென்னீலம் போல்
இதயம் பூராவும் உன்னீரம்

மேகம் எல்லாம் வெண்மை போல்
நினைவில் எல்லாம் உன்மென்மை

விடாய் கொண்டு தேடும் உள்ளம்
பெருங்காடாய் சடைக்கும் நேசம்

கண்மணி
பாகாய் பெருகும் பேரன்பு
வாகாய் பருக நீ எங்கே?



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

பாட்டிக்கு பதிமூனு வயசுல
கல்யாணமாகி
புகுந்த வீடு வந்தப்ப
ரெட்டமாட்டு வண்டியில
சீதனமா வந்ததாம்
எங்க வீட்டுக்கு
இந்த உரலுக்கல்லு.



கிரைன்டர் மிக்ஸின்னு
விஞ்ஞானம் வளர உரலுக்கு
வேலை இல்லாம போயிடுச்சி.

டெங்கு காய்ச்சலுக்கு
ஆங்காங்கே
தேங்கிக் கிடக்கிற தண்ணியில
உண்டாகிற கொசுதான்
காரணம்னு அடிக்கடி
தொலைக்காட்சியில காட்றாங்க.

குழந்தை குட்டிங்க
இருக்கிற வீடாச்சேன்னு
உரல்ல தேங்கிக் கிடக்கிற
மழைத்தண்ணிய வழிச்சும்
தொடச்சும் விடுறா அம்மா.

இப்படியாச்சும்
உரலு கவனிக்கும் படியா
இருக்கேன்னு
மனசுக்குள்ள மகிழ்ச்சி
பாட்டிக்கு.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

பிறந்தநாள் ஒன்று
இறக்கும் நாள் ஒன்று
இரண்டுக்கும் இடையில்
இடைவெளிதான் கைவசம்.

அழுத வண்ணம் பிறக்கிறான் மனிதன்
அடுக்கியபடி
இன்பங்களையும் துன்பங்களையும்
தூக்கிச் சுமக்கிறான் மனிதன்.

காலங்களில் வாழ்கிறான்
கருத்துப் பிழையின்றி.
"அவன்" செயல் நடக்கிறது.
நடத்தையில் தோற்றத்தில்
"மாற்றம்"

சகலத்திலும்
"மாற்றம் "
சர்வ வல்லவரை
மிஞ்சிப் போகும் தலைக்கனம்
அது மெய்யென நிரூபிக்க
உலகு சொல்லும் நிதர்சனம்.

"மாற்றம்" ஒன்று இல்லை என்றால்
மதி கூட
பௌர்ணமியையோ
அமாவாசையையோ காண முடியாது!



இயற்கையின் வடிவமே
இறைவனாகி
"மாற்றம்" கண்டிடச் செய்கிறான்
மனித வாழ்வில்
மலர்வும் உதிர்வும்
எவ்வாறோ நிஜமோ?
அவ்வாறே " மாற்றம் " நிஜமானது!


கவிஞர் திருமதி. ஜுவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை(இலங்கை)

# மனிதனைத் தேடுகிறேன்

மாறிய உலகில்
மாறாத இதயம் கொண்ட
மனிதனைத் தேடுகிறேன்

பாசம் மறந்த உறவுகளில்
பண்பட்ட மனிதனைத் தேடுகிறேன்
கருணை இல்லாத புவிதனில்
கனிவான மனிதனைத் தேடுகிறேன்


ஈனச்செயலில் ஈடுபடும்
எத்தர்களின் மத்தியில்
ஈரமான உள்ளம் கொண்ட
மனிதனைத் தேடுகிறேன்

காமத்தை மட்டும் நாடிடும்
உறவினில் மெய்யான காதல் கொள்ளும்
மனிதனைத் தேடுகிறேன்

நிறம் மாறும் பச்சோந்தி
மக்களின் நடுவில் தன்னலமற்ற
மனிதனைத் தேடுகிறேன்

வஞ்சம் செய்திடும்
மனிதர்களின் இடையே
ஈகை புரிந்திடும்
மனிதனைத் தேடுகிறேன்

இன்னல் தந்திடும்
அனைவரின் மத்தியில்
இனிமையான மனிதனைத் தேடுகிறேன்



தன்னலமே பெரிதென எண்ணும்
ஈனர்களிடமிருந்து விலகியிருக்கும்
மனிதனைத் தேடுகிறேன்

உண்மையை பேசிடும்
உத்தமமான மனிதனைத் தேடுகிறேன்
உழைப்பால் உயர்ந்திடும்
உன்னதமான மனிதனைத் தேடுகிறேன்

மனிதநேயம் மிகுந்த
மனிதனைத் தேடுகிறேன்
பழமையை மறவாது
பண்பாட்டை வளர்க்கும்
மனிதனைத் தேடுகிறேன்

நம்பிக்கை கொள்வோம்
நானிலத்தில் சிறந்திடுவோம்

கவிஞர் ஜெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

பிணி திறை வன்மம் கூட
பாழ்படும் அரசு.
தெவ்வர் புகு அக்கசாலை தீரா
இன்னல் சூழ வீழும்.

காடறுந்து மாடம் பெருக
கசிந்த நீர் குழாய்
தாகம் தீர்க்க.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# நினைவுகள்

காலையில் சூரிய உதயம்.
உதிர்த்த பிறகு, என்ன நேர்ந்தாலும்.
பார்த்து விடலாம் என்ற தன்னம்பிக்கையுடன்.
விரைவாக சென்று வீட்டில் இருக்கும்.
சில்லறைகளை எடுத்து கொண்டு.
கடைக்கு செல்ல புறப்படுவேன்.
அங்கு சுவாரசியமான பொருள்களை பார்த்து.
மகிழ்ச்சியில் ஆழ்ந்து துள்ளி குதித்தேன்.
அது எல்லாம் கனா காணும் காலங்கள்.
சிவப்பு, மஞ்சள், பச்சை.
என பல வண்ணங்களால் நிறைந்திருக்கும்.
குச்சிமிட்டாய், சாக்லேட் பார்த்து.
பிரமித்து போனேனே.
நிகழ் காலத்தை விட
இறந்த காலத்தின்.
நினைவுகளே அதிகம்.
எப்போதும் மங்கி போகாதே!



கவிஞர் மோனிஷா

# உன்னைத் தேடு!

உனக்குள் இருக்கும்
உன்னைத் தேடு.
உச்சங்கள். தொடவே
உதயங்களை நாடு

வலிகள் ஆயரமே
வல்லினமாய் மாறிடு
வசவும் துக்கமும்
வரையறைகளிடமிருந்தே
துரத்திடு

வானமும் ஏறிடலாம்
விண்மீனும் தொட்டிடலாம்
வாள் எடுக்காமலே
வாழ்வை வசப்படுத்தலாம்

ஏணியில் ஏற்றிடு
ஏழைகளுக்கு உதவிடு
ஏகலைவனாய் மாறிடு.
ஏட்டறிவைத் தாண்டிடு

உறுதியாய் உழைத்திட
உள்ளத்தில் உற்சவமெடு
உலகம் போற்றும்
உன்னதனாய் மாறிடு



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# தபால்காரர்

காற்றோடும் மழையோடும்
வெயிலோடும் கலந்த
உன்னத உறவுக்காரர்

கை நிறைய கடிதங்களுடன்
மனம் நிறைய அன்புடன்
நடமாடும் உழைப்பாளி

உங்கள் குரலால் பலரும்
இன்று பல்வேறு பணிகளில்
பாதுகாப்பாய்

இன்றைய இணைய உலகிலும்
உங்கள் வரவை காத்திருக்கும்
உள்ளங்கள் அதிகமாய்

காக்கி சீருடையில் கம்பீர
அடையாளம் காவல் துறை
மட்டுமல்ல தபால் துறையும் தான்

கடிதங்களின் காதல் இன்றும்
உற்சாகமாய் காரணம்
தபால்காரரின் சேவை

தபால் துறையின்
முதுகெலும்பாய் முகவரியாய்
தபால்காரரின் அடையாளம்

அஞ்சல் துறையின் சேவைகள்
என்றுமே எங்களின்
தேவைகளாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# நீயும் நானும்

நேர் எதிரே
பயணிக்கின்ற மனம்
விட்டுபிரியும் சிலகணம்
காற்றலையின் அலை குணம்.
எட்டிப்பிடிக்குது ஓர் சினம்
அழகென்றால் பெண்மையா ?
வெண்மதியே பதில் கூறு.

மௌனம் காத்து
நீயும் காரணம்
கூறி மறையாதே.
முகிழத்திடை
பவித்திரமென்றா மனம்.
ஒரு நொடிக்கணம்
மதியழகில் பதில்
தேடும் என்னிடை தினம்

இளமை ஊசலாடும்
தனிதிடம்
பலவித புதுமைத்தேடி,
பூர்வீகம் மறந்து கற்பனை
கனாவில் மூழ்கி ;
கவிதை தொடுகின்றது மனம்
திறந்து உடைந்தது
தனிதாகம்
தனிமையின் பயணத்தில்
துணையாய்
உன் நிழ(னை)வொளி
பாதை செல்லும் வரை.



கவிஞர் வியாத்தன் சீ. லக்ஷ்ஷரன்

# பேசாத வார்த்தைகள்

ஓராயிரம் வார்த்தைகள்
பேச நினைத்தாலும்
ஓரமாய் நின்று
சில நாழிகைகளில்
வேடிக்கைப் பார்க்கும் மனம்

ஒளிர விடாத மின்குமிழாய்
இதய அறைகளும்
சிறை பிடித்துச்
செல்லும் தினம்

பார்க்கும் போதெல்லாம்
கண்கள் பேச
வார்த்தைகள் மறுக்க
கருவிழிகளில் ஏதோ
சொல்லாத முடியாத ஏக்கம்
தேங்கி நின்று
தாக்கிக் கொள்ளும்

பேசிய வார்த்தைகள்
காற்றோடு கலந்து
காணாமல் போக
பேசாத வார்த்தைகள்
உயிரோடு உறைந்து
மனதோடு மறைந்து
வாட்டி வதைக்கும்



சொல்லத்துடிக்கும்
வார்த்தைகளைச்
சொல்லிடச் சொல்லி
நெஞ்சம் நொடிக்கொரு முறை
தட்டும் சத்தம்
என் செவிகளில் ஒலிக்கிறது
உனக்கது கேட்கவில்லை போலும்

வாய் விட்டுச்
சொல்லாதவைகளுக்கு
அன்பும் அதிகம்
ஆயுளும் அதிகம்
பிரியத்தின் உச்சமும்
பிடிப்பில்லாத எச்சமாய்
பேசாத வார்த்தைகள் இறுதி வரை
பேச முடியாமலே கடக்கின்றன

கவிஞர் முபீதா அமீன், அக்கரைப்பற்று

இருள் அகற்றி இல்லாமை நீக்கியே
அருள் வாழ்வை அகத்தில் பெருக்குமே
எதிர்காலம் ஒளிர எக்காலமும் துணையாய்
புதிராய் வளர்ந்தே புரட்சி செய்யுமே

வெற்றி வாழ்க்கையை விரைவில் தந்தே
போற்றும் பலனை புகழ்ச்சியாய் அளிக்குமே
புண்ணிய பலனை புனிதமாய் பெருக்கி
எண்ணிய வளமாய் எழுச்சி தந்திடுமே

கண்ணிய வாழ்வை கணக்காய் தந்தே
மண்ணில் உதிக்கும் மனதின் சிறப்பே
பெற்றோர் துயரை பெரிதும் நீக்கி
உற்றோர் அன்பை உவந்து வளர்க்குமே

தேற்றும் வளங்கள் தெளிவான தரமாய்
ஊற்றும் சுனையின் ஊற்றாய் வளர்க்குமே
பரிவின் துணையில் பதமாய் உயர்ந்து
தெரிந்த சுற்றமும் தெளிவாக்குமே பண்பில்

திறன்கள் பலவும் திறந்தே நின்று
வரன்கள் பெருமையில் வளமை சேர்க்குமே
பல்வகை பண்புகள் பாரினில் வளர்ந்தே
வெல்லும் விதமாய் வைத்திடுமே வையகம்

சென்ற இடமெங்கும் செழுமை சேர்த்து
ஊன்றும் பொழுதாய் ஊக்கம் தந்திடுமே
குன்றின் மேலாய் குணமும் வளர்த்து
நன்றி உணர்வை நானிலம் போற்றுமே



கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# காவிய கவிஞன் கண்ணதாசன்





தேனமுத தமிழ்மொழியும் செந்தமிழ் நாமொழியும்
இன்பமுரு சொற்களும் சிந்தையில் மலர்ந்து
செவியில் நுழைந்து செம் மொழியால்
புவி யாளும் கவி யரசே
உளமறியும் சொல் யெல்லாம் நம்பிக்கை
கொடுத்து சிந்திக்க வைத்து விடும்
நெஞ்சிலே புது தெம் பூட்டி
புதுப் பிறவி தன்னை தந்துவிடும்

கற்றோர் கல்லாதாரும் விரும்பி போற்றும்
காவியத் பாவலர் கவியரசர் கண்ணதாசன்
பாடல்களால் உள்ளத்தை நுழைந்த அறிஞர்
பாடம் கற்பிக்கும் சிந்தனையாளர்
பாமரனும் விரும்பும் இன்பக் கவியால்
களைப்பாரி இன்புற்று என்றும் களிக்க
சொல்லாலே பாட் டெடுத்து மெருகேற்றி
கலியுக கண்ணனாய் திகழுபவர்

துன்பத்தில் துவளும்போது மும்பாட்டு துணையிருக்கும்
துயர்களைந்து நிம்மதி தந்துடுமே தாசா
உழைத்து களைத்து ஓய்வெடுக்கும் வேளையில்
ஓயாது உன்பாட்டு தாலாட்டு ஆகுதய்யா
சங்கத்தமிழ் காதலையும் கண்முன் ஈர்க்கும்பாடல்
வாழ்வியல் முறையை வளம்வுர செய்யுமே
வனவாசமும் மண்வாசமும் வாசம் செய்கிறது
காவியவரிகள் கலங்கரை விளக்கமாய் இன்றும்.

ஓங்குக. கவியரசர் புகழ்
வாழ்க. கண்ணனதாசனார்

கவிஞர் ஆதி.சுப.சரவணன், புதுச்சேரி

குழந்தையின் மாற்றம்
குடும்பத்தை மாற்றும்

குடும்பங்களின் மாற்றம்
தெருவை மாற்றும்

தெருக்களின் மாற்றம்
ஊரையை மாற்றும்

ஊர்களின் மாற்றம்
ஒரு நகரையே மாற்றும்

நகரின் மாற்றம்
மாநிலத்தையே மாற்றும்

பல மாநிலங்களின மாற்றம்
ஒரு நாட்டையே மாற்றும்


பல நாடுகளின் மாற்றம்
இந்த உலகத்தையே மாற்றி விடும்

மாற்றம் ஒன்றே மாறாதது
நல்லெண்ணத்துடன்
நாமும் மாறுவோம்




கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், அக்குறணை (இலங்கை)

வெள்ளை உடை அணிந்த
விதவை என்கிறார்கள்
ஆனால்
யாருக்கும் தெரியவில்லை
வெண் மேகம்களுக்குள்ளும்
ஒளிந்திருக்கிறது
கருமேகம் அதனுள்ளும்
சிறிதேனும் வீற்றிருக்கிறது
மழை துளி என்று.



கவிஞர் ரிஷானா, கிழக்கிலங்கை

இயற்கையின் பிடியிலும்
இசையின் சுவாசத்திலும்
வாழ்க்கையின் பயணம்
மெல்ல நகர்கிறது கடிகார
மணி முள்ளை போல



கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, சிதம்பரம்

# உமா தேவி

உமாதேவி சிவனின்
இடது பாகத்தில் திரிசூலம்
கையில் ஏந்தி வீற்றிருக்கிறாள்.
உமாதேவி சிங்க வாகனத்தில்
கம்பீரமாக வீற்றிருக்கிறாள்.
சிவனின் ஆனந்த தாண்டவத்தை
மகிழ்ச்சியுடன் பார்க்கிறாள்.
சிவனில் உறைபவளே!ஆதிசக்தியே!
சிவன் அன்பின் சக்தியானவள்.
இவ்வுலகில் அம்மை அப்பனாக
உலகை சுற்றி வலம் வருகிறார்கள்.
கலியுகத்தில் கண்கண்ட தெய்வமே!
அன்னை பராசக்தியே!
ஓம் சக்தி மந்திரத்தை உச்சரிக்கும் போது
மனம் உன்னிடம் சரணடைகிறது தாயே!
உமாதேவியே பிரபஞ்சத்தின் சக்தியானவள்.
உமாதேவியை பார்க்க கோவிலுக்கு
தேடி வருகிறோம்.
வாழ்வில் வறுமையை நீக்கிவிடு தாயே!
இப்பிறவியில்
இறைவனிடம் சரணடைவது
பேரானந்தம்!



கவிஞர் மா. நந்தினி, சேலம்

மஞ்சள் பட்டாடை உடுத்தியே
ஆதவனும் ஓய்வெடுக்க எத்தனிக்க

கடும் வெப்பமதுவும் குறைந்தே
குளிரை தந்துவிட

சில்லென்ற குளிர் காற்றதுவும்
தேகமதைத் தொட்டு விட


வந்ததே இனிய பொன்மாலைப் பொழுது!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி


# மரம் அழுகிறது

மழை ஓயாமல்
பெய்து கொண்டிருக்கிறது,
பகலில் உஷ்ணம் விழுங்கி
ஜீரணிக்க முடியாத
கவலைகளை உசுப்பிவிட்டேன்
அருகில் நின்ற
மரமும் கதறி அழுகிறது.



கவிஞர் அதீனா அபூ உபைதா, ஓட்டமாவடி

வலிகள் நிறைந்த வாழ்க்கையில் விழியோர
கண்ணீர் சிந்த பொழுதும் விடிந்தது
கனவுகள் எனக்குள் ஆயிரம் இருந்தும்
எதை நோக்கி என்னோட பயணம்
எனக்கே தெரியாது சில நேரங்களில்
மனதில் இருக்கும் கவலைகள் எண்ணிலடங்கா
யாரிடம் சொல்வது படைத்தவனிடம் தான்
ஒவ்வொரு நாளும் நகர்ந்து செல்ல
விடிவுக்கான காலம் வராதா ஏக்கத்தோடு
வாசலைப் பார்க்க விடிந்தது விழியும்
திறக்க எழுத்துக்கள் என்னை பிரகாசிக்க
நானும் எழுதினேன் கற்பனை கனவோடு
ஆர்ப்பரிக்கும் அருவியைப் போல பொங்கியது
எண்ணங்கள் வண்ணங்களாக
அழகாக்கி பிரசவிக்க
வார்த்தைகள் என்னிடம் இல்லை
மௌனமானேன்.



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# மழைக்கால காளான்கள்

நாடக மேடையாய் நாளுமொரு வேடமிட்டு
நடிக்கின்ற மனிதர்கள் வலம் வரும் உலகிலே.
நடிப்புதான் உண்மையென நம்பும் காலமுமாச்சி.

பொய்யான வாழ்க்கைதான் நிலையென ஆச்சி
எளியவனை வலியவன் ஏய்க்கும் குணமும்
விரோதம் குரோதம் மலிவாய் போச்சு.


உண்மை மனிதர்களின் உயர்வான செயல்களும்
லட்சியமே நிச்சயமான உயர்நிலை
வாழ்வெல்லாம் அரிதாய் போச்சு.

பொய்யர்களும் புரட்டர்களும் நிறைந்திட்ட
பூமியில் புண்ணிய மனிதர்கள்
புகழ் மறைஞ்சு போச்சு.

அற்புத மனிதர்களின் அறமான வாழ்வுதான்
பொய்யான மனிதர்களால் திரை போட்டு மறச்சாச்சு.

மழைக்கால காளான்களாய் பூத்திட்ட தீமைகளும்
ஆதவனை கண்ட பனி போல் காணாமல் போகும்
காலமும் வந்தாச்சு.

உண்மை உழைப்பும் நேர்மை வாழ்வும்
வளம் பெற்று நிலை பெறும் காலமும் வந்திடுமே
எளியவர்களின் கனவும் இனிதாய் நடந்திடுமே.



கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# இதயத்தின் ஓசை

வார்த்தை வலைகளை
மெல்ல கட்டமைத்துக் கொண்டு
புல்லிலிருந்து நழுவும் பனியாய்
கவிதை அருவி ஊற்றெடுத்து
காதலைச் சொல்ல எத்தனிக்கையில்
உன் விழி உதிற்கும் அம்புகளால்
இதயத்தின் ஓசையை
இரு மடங்காக்கி திருப்பித் தருகிறாய்.

நமக்கிடையிலான மௌனத்தின் கொடியை
யார் முதலில் இறக்குவது என்ற போட்டியில்
கடைசிவரை முடிவெழுதாமலே
காற்றோடு பறக்கவிட்டு
லாடங்களை மாட்டிக்கொண்டு
வானச் சோலையில் உலவும்
நிலாவில் முகம் பார்த்துக் கொள்ளும்
நாடகம் பழகிப் போனது.

தீர்ந்த கணக்குகளை தேய்பிறையிலும்
சுமந்த கனவுகளை வளர்பிறையிலும்
இடம் மாற்றி எழுதியதில்
முழு நிலவு இருப்பதை மறந்து போனோம்.

எதிர்பாரமல் குழி விழுந்த
கன்னத்தை பார்க்கும் போதெல்லாம்
கூடுதலாய் சில்லு கருப்பட்டி கடித்த
உன் ஞாபகம் தோன்றி
இதயத்தின் ஓசையை இலகுவாக்க
தாலாட்டுப் பாடுகிறது



கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

எனது கரம் பிடிக்காத நீ
நன்றாகவும் நலமாகவும் வாழ்கிறாய்
நான்காவது மனிதனுடன்
உன்னையே நினைத்த நான்தான்
நான்கு பேர் திட்ட நாசமாகி
நடு ரோட்டில் நாயாய் அலைகிறேன்
நாள்தோறும்



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு



அகர முதல

# பெண்ணின் சினம்



அழகாய் மலர்ந்த மென்மைதான் அவள்
சுடும் சூரியனாய் மாறுவாள் சிலகாலம்
அன்பு தந்தவள் அநியாயம் கண்டால்
அழிக்கத் துணியும் நெருப்பாய் விரைவாள்.
சிரிப்பில் கவர்ந்தவள்
கோபத்தில் சீறிடுவாள்

சிறு வார்த்தையும் நெஞ்சை பிளக்கும்
மௌனத்தின் பின்வாங்கல்
மேகத்தின் சுமை, பொங்கி வழியும்

அவளின் கோபம் சபமல்ல பாடமே
நேர்மையிலேயே அவள் உணர்வின் வடிவமே
பொறுமையைக் கடந்த பிம்பம் அது
உணர்ச்சி அடக்க முடியாது அது

விரல்கள் நடுங்கும், கண்கள் நெருங்கும்
அவள் கோபத்தில் உருக்கம் பெருக்கம்
அவளது சினம் தீர்ப்பதல்ல துன்பம்
புரிந்து கொண்டால் என்றும் உண்மையாவர்
அன்பில் மலரும் அவள் இதயம்

கோபம் வந்தாலும் கவசமும் அதுவே
பெண்மையின் சினம்
மற்றவர்களை சிதைக்காது
நிச்சயமாக கோபமும்
சீர்படுத்தும் காவியமாகும்


கவிஞர் ரிஸ்னா அஸீஸ், அக்குறணை (இலங்கை)

# எதிர்காலம்

இயந்திரங்களின் கையில்
சிக்கி முக்கியும்
சக்கரமும்.

ஆதி குகைகளில்
மீண்டும் விழும்
மனித சமுதாயம்
சித்திர எழுத்துக்களை
மொழி பெயர்க்க

பிரபஞ்சம் நீள்கிறது
மாறுபட்ட கோணத்தில்
கேள்விக்குறிகளோடும்
ஆச்சர்யக்குறிகளோடும்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# பண்டிதன்



பலவற்றை கண்டு அதை கற்றவன்
பண்டிதன் ஆவானே!
அன்னம் எப்படி தண்ணீரை விலக்கி
பாலை மட்டுமே அருந்துமோ அதுபோலவே
அறிஞர் பெருமக்கள் நல்லவற்றை மட்டுமே
எடுத்துக் கொண்டு நயம்பட சொல்பவரே!
"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" இது வள்ளுவர் வாக்கு.

எந்த நோய் என்று ஆராய்ந்து அதன்பின்னே
வைத்தியம் செய்பவனே வைத்தியன் ஆவான்.
பண்டிதன் மலரைத் தேடிச் செல்லும்தேனீ போல
எங்கே நற்செயல்கள் சொல்லப்படுகிறதோ
அவனை அங்கே காணலாம்.

நிறைய படிப்பை படித்தாலும்
மனிதாபிமானம் உள்ளவனே மனிதன்.
நூல்படி நடப்பவனும், கற்றபடி நிற்பவனும்
பண்டிதன் ஆவானே!

கவிஞர் கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# மணமிழந்த மலர் மனங்கள்

அலட்சியமாய் போனதுவோ
மழலைகளின் வாழ்வு
அன்றாடம் சமூகத்தில்
பிறப்பொடுக்கும் தாழ்வு

இலட்சியத்தை புறந்தள்ளி
எதற்கிந்த ஓட்டம்
இலட்சத்தை பார்ப்பதற்கே
பெற்றோர்கள் நாட்டம்

வறுமைக்கு வாக்கப்பட்ட
வசந்தமுல்லை தோட்டம்
வசப்படுத்தி காசுபார்க்கும்
வஞ்சகர்கள் கூட்டம்

சிறுமைசெயல் நீக்கிடதான்
செயல்படுவோம் நாமும்
சிந்தையிலே சிறார்களையும்
ஏற்றிடுவோம் நாளும்

பூந்ளிர்கள் மேனியெல்லாம்
பிளந்தேதான் செல்லும்
பூகம்பத்தின் ரேகைகளாய்
மழலைகளைக் கொல்லும்

கந்தகத்தின் வீச்சினிலே
மாய்ந்தழியும் முல்லை
கண்ணுக்குள் கனவுநூறும்
தோய்ந்தழியும் கிள்ளை

எதிர்கால தூண்களெல்லாம்
சிதறுதய்யா வெடியாய்
எண்ணத்தின் தோரணங்கள்
கந்தகத்தின் பொடியாய்

சதிராட்டம் போட்டுத்தான்
சரித்திரத்தை சாய்க்கும்
சந்ததிகள் நலமற்று
புதைக்குழியில் மாய்க்கும்

சுருட்டப்பட்ட பட்டாசாய்
ஆலைக்குள் முடக்கம்
சுருண்டுபோன கனவெல்லாம்
கண்ணுக்குள் அடக்கம்

கருத்தாக படித்திடதான்
அசைப்போடும் நெஞ்சம்
கல்வியினை கொடுக்காமல்
கலந்திடுவார் நஞ்சும்

விடியல்களை காணாத
வீட்டிலெனும் பூச்சி
வெடியாக புகையுதய்யோ.
மழலைகளின் மூச்சி

மடிகின்ற பூக்களெல்லாம்
காத்திடத்தான் வேண்டி
மகிழ்ச்சிபெற வழிகாட்டி
நம்பிக்கைத் தூண்டி

எண்ணமெல்லாம் மணம்வீசும்
கல்வியையும் தந்து
எடுப்பாக கொடுத்திடுமே
கல்வியெனும் பந்து

வண்ணவண்ண காகிதத்தில்
வெடிகளையும் செய்து
வனங்களாக குழந்தைகளின்
மனதினையும் கொய்து



காகிதப்பூ போலவேதான்
கண்களையும் பறிக்கும்
காட்சியாகி காலமெல்லாம்
கிடந்தேதான் வெறிக்கும்

வேகின்ற கனவெல்லாம்
வெடித்துத்தான் சிதறும்
வேண்டுமென்று கல்விகற்க
மழலைமனம் பதறும்

வெறுமையான வாழ்வுநீங்கி
வெற்றிவாகை சூட
வெல்லுகின்ற வழிகளையும்
காட்டித்தான் செல்வோம்

பொறுப்புகொண்டு பூந்தளிர்க்கு
புகட்டிடுவோம் கல்வி
பொன்னான வாழ்வுபெற
கல்வியென்றே சொல்லி.

கவிஞர் தீ. செல்வராணி, திட்டக்குடி

இந்த வெள்ளைக் காகிதம்
சற்றே பரபரக்கிறது
என்ன சேதியோ என நின்று பார்த்தேன்
படபடப்பு குறையாத வெள்ளந்தி
வெள்ளைக் காகிதம்

ஆசையில் எடுத்து
மைப்புள்ளியில் சற்றே
விரலைசைத்தேன்
வெள்ளை சிரித்தது
நிரப்பிக்கொண்டேன் எனை
உன் எண்ணத்தை
என் வண்ணத்தில்

ஆச்சரியமே
சரளமாக சங்கதிகள்
உன்னிடம் மட்டுமே
சரியா தவறா மொழிப்பெயர்ப்பில்
முன்னும் பின்னும்

மனம் பேசாத
திருமணத்தில்
நிறம் பேசியதால்
தடைப்பட்டது திருமணம்
யாரிடம் கொட்டுவது
புன்னகையை சூடிய நான்
பிழைத்தேன் என்றேன்

அதுவும் உன் மடியிலே
அவையின் ரகசியம் அனைத்தும்
அத்தனை நிறமாய் அவன் என்றாய்.
என் நிறமே அவன் நிறமும்



ஓ...என்ற எழுத்திலே
உன்னிடமே உன் ஆதங்கம்
போல் நின்றது

உடைத்த கோதுமை நிறத்தை
மனதில் வரித்ததால்
உடைந்து போனதாம் அவனின்
[அவளின்] மனமும்

வலைக்குள் சிக்காமல்
நகர்த்தியது நிறம்
அழகிடி நீ என்று அன்றொருநாள்
பெய்த மழைத் தூறலோடு
உதிர்த்தவன் வருவானா
காத்திருப்புக்கு வலியில்லை
சுற்றத்தின் சுடு சொற்கள்
தீண்டி தீண்டி மனத்தழும்புகள்
மகுடம் சூடிக்கொள்கிறது

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)



பிரபஞ்ச காலத்தை கணக்கிலிட்டால்
மனித யுகமே
நீர்குமிழிதான்
***
மாசிலா பை
மஞ்ச பை
***
நம் மதியே
நிம் மதி
***
ஒன்றே ஒன்று என ஆரம்பிக்கும் முத்தம்
முடிவிலி
***
இதே இடத்தில் உக்கார வைத்து விட்டு அப்பாக்கு ஊசி பா என்றார்,
அதே இடத்தில் இன்று நான் எனக்குத்தான் பா ஊசி என்றேன்
பொய்கள் வலிக்கின்றது
***
காப்பு காய்த்த கைகளில்
காசு காய்ப்பதில்லை
***
மணமுடிக்க தேவை பணமல்ல
மனம்
இவன் கொரோனா
***
ஒன்றுமில்லை என்பதை
ஒரு இரவு முழுக்க பேசினால்
அதுவே காதல்
***
தீனிக்கென்று ஒரு வாளி இருக்கும்
அதுதான்
என் சிறுவயது பொக்கிஷம்
***
எதிர் காற்றில் எச்சில் துப்புவது போலதான்
சாதி பெருமை பேசுவது
உன்னை நீயே துப்பிக்கொள்கிறாய்
***
புதிதாய் மரம் நடுங்கள்.
இயற்கை பேரிடர்களில்
மனிதனை மட்டும் எண்ணாதீர்கள்
சாய்ந்த மரங்களும் உயிர்கள்தான்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

## அன்றைய இனியவை

காபி பொடி
காகிதத்தை ஊதி
சப்தம் எழுப்பியது

தேர்வு அட்டையை
மட்டையாயும்
விக்ஸ்டப்பாலை
பந்தாக பயன்படுத்தி
இல்லத்துக்குள் ஆடிய
கிரிக்கெட்

காகித்தை சுருட்டி
சுவற்றின்மேல்
கைகளால் தனிஒருவனாய்
ஆடிய வாலிபால் ஆட்டம்

திரையரங்கம் செல்லும்
சிலமணிநேரங்களுக்கு முன்னரே
அதை பற்றியே
வாய் ஓயாமால் பேசிய
உதட்டுமொழிகள்

பண்டிகையை உண்மையில்
ஒருமுறை கொண்டாடுவதற்குமுன்
பலமுறை கனவில்
கொண்டாடிய நாட்கள்
*****

## ஹைக்கூ கவிதைகள்

1.அஃறிணைகள் ஒன்று
மாற்றி ஒன்று பேச்சு
கடிகாரங்கள்

2.பதில் இருந்தும்
உதட்டின் மௌனம்
உறவு நீட்டிப்புக்காய்

3.உறக்க இரவுகள்
தொலைப்பு சிந்தனைகள்
வரிசையால்

4.பேசாதவர் பேச்சும்
பேசுபவரின் அமைதியும்
கேள்விகளாய்

5. தீர்ந்துவிட்ட
பொருளுக்கும் எதிர்பாரா
நிகழ்வுக்கும் சரியாய் போச்சு

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

காதல் கனிந்ததே உறவும் கலந்ததே
விழிகளின் பார்வையில் பிறந்தது மோகம்
காதலின் உணர்வு மனதினில் தெரிந்திடும்
காதலியின் கடைக்கண் ஈர்த்திடச் செய்யும்
இதயம் படப்படக்கும் காதலனைத் தேடும்
மனதில் அரவணைத்திட ஆசையும்வரும்
உறக்கம் தொலைந்திடும் இரவுகள் நீளும்
விடியலும் மறந்திடும் நெஞ்சமும் ஏங்கும்
கனவுகள் வந்து நொடியில் மறைந்திடும்
கைப்பேசி அழைப்பும் தொடர்ந்து சிணுங்கிடும்
மெல்லப் பேசுகிறாள் மனசை வருடுகிறாள்
காதலி நேரில் வருவாள் கைப்பிடிதிடுவாள்



கவிஞர் இரா. சீ. பாலகுமார், சந்தோசபுரம் (சென்னை)

# தித்திக்கும் தீபாவளி!

அடைமழைக் காலமாய் வடகிழக்குப் பருவமழை!
அடைகாத்த ஆசைகளுக்கு விடைகிடைக்கும் பண்டிகையாய்
ஐப்பசி மாதத்தில் வருகைதரும் தீபாவளி!
எப்போது வருமென்ற எதிர்பார்ப்பு சிறுவயதில்!
அப்பாக்கள் படும்துயரை அறியோமே அவ்வயதில்!
இருப்பேதும் இல்லாமல், விருப்பங்களை நிறைவேற்ற
மறுப்பேதும் சொல்லாமல் முயன்றிடுவார் இயன்றவரை!
வருடத்திற்கு ஒருமுறைதான் புத்தாடை அந்நாளில்!
வருகைதரும் புத்தாடை, பட்டாசு வகைகளுமே!
விருந்தாகும் காரவகை இனிப்புகள் நாவினிற்கு!
இரவெல்லாம் விழித்து அதிகாலை வேளையிலே
நலங்கிட்டு நல்லெண்ணெய்க் குளியல் வெந்நீரில்!
ஒளிமயமாய் வீடெங்கும் தீபங்களும் மத்தாப்பும்!
இருண்டவானம் இடையிடையே வெளிவாங்கி ஒளிபரப்பி
வறுமை நிலையல்ல வாழ்வினில் என்றுணர்த்தும்!
ஊர்முழுதும் மகிழ்வலைகள்! பட்டாசின் ஒலியலைகள்!
குட்டினால் பொறுக்காத பொட்டுப் பட்டாசு!
எட்டுத் திக்கும் சென்றிடு என்றுரைக்கும் சக்கரங்கள்!
இலக்கை எட்ட இடைவிடா முயற்சியினால்
பலனுண்டு என்றுணர்த்தும் ஒளிவீசும் கலசங்கள்!
புன்னகை சிந்தும் இன்முகங்கள் மகிழ்வளிக்கும்
என்றுணர்த்தும் மத்தாப்பு! சரம்சரமாய் சாட்டைகள்!
சிறுவயதின் நினைவலைகள் மகிழ்வளிக்கும் எந்நாளும்!
பொறுப்புள்ள பெற்றோராய் மகிழ்விப்போம் மழலைகளை!
அடுத்தடுத்த தலைமுறைக்கு பரவட்டும் மகிழ்வலைகள்!
எடுத்துரைப்போம் பிள்ளைகளுக்கு இந்நாளின் மகத்துவத்தை !
இருப்பதைப் பகிர்ந்துண்போம்! இல்லாதோர்க்கு ஈந்திடுவோம்!
உறவினர்க்கும், நட்பினர்க்கும் உளமாற வாழ்த்துரைப்போம்!
பட்டாசு கொளுத்துகையில் பாதுகாப்பாய் நின்றிருப்போம்!
எத்தனையோ இடர்கள் துன்பங்கள் இருந்தாலும்
தித்திக்கும் தீபாவளியில் அத்தனையும் மறந்திருப்போம்!
பட்டாசுத் தொழிலாளர் பாதுகாப்பை உறுதிசெய்து
எட்டட்டும் உயர்வுநிலை எனவேண்டி வாழ்த்துரைப்போம்!
மட்டற்ற மகிழ்வினை வழங்கட்டும் தித்திக்கும்தீபாவளி!
அனைவருக்கும் இனிய தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துகள்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# மயிலின் இறகின் நிறமாக

## அத்தியாயம் -1

(புதினம்)

நரேன், சன்னல் வழியாக வெளியே எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தான் சன்னல் கம்பியில் வந்தமர்ந்த, புறா தலையை இங்குமங்கும் அசைத்து பார்த்துக்கொண்டிருந்தது. ஊரே வெறிச்சோடிக்கிடக்க ,நரேன் அந்தப் புறாவின் அசைவுகளை ஆச்சர்யாமாக பார்த்துக்கொடிருந்தான். அலகு மெல்லிய வளைவுடன் அந்த மூக்கின் அருகில் ஒரு சின்ன வெள்ளைப் புள்ளியில் ஆரம்பித்து பின்னால் மெல்லிய சாம்பல் நிறத்தில் இரு கண்களையும் தொட்டது.

மெதுவாக நடந்து அருகில் கிடந்த தானியங்களை கொத்திக் கொண்டிருந்தது. புறா. அதன் கழுத்துப் பகுதியில் சாம்பல் நிறம் கொஞ்சம் அடர்ந்துபின்னால் மயிலின் இறகின் நிறமாக மாறி இளஞ்சூரியனின் கதிர்களில் அழகாக பிரதிபலித்தது. அதன் தலை முன்னும் பின்னும் அசைய அதன் இறகுகள் அங்குமிங்கும் அசைந்து மிகவும் ஆச்சரியமாகவும் அழகாகவும் இருந்தது.

கையில் டீ குவளையுடன் வந்த வசந்தன் "என்ன நரேன், வெறுமனே புறாவை இரசிப்பதில் நின்றுவிட்டாய்.. நான் நேற்றுகேட்டது என்னாயிற்று" ?என்றான் இன்னொரு டீ குவளையை அவனிம் கொடுத்தவாறு.
புறாவின் அசைவுகளில் லயித்துப் போயிருந்த நரேன், கையிலே டீ கோப்பையினை வாங்கிக் கொண்டு , " என்ன வசந்த் , வந்த காரியம் அவ்வளவு எளிதில் மறந்துபோகிற விசயமா?.."

டீயை சுவைத்துக் கொண்டே "சொல்லு. நாம் இந்த களக்காடு பகுதிக்கு வந்து கொரோனாவுக்கு மூலிகை மூலம் மருந்து கண்டு பிடிக்கலாம் என்றுதானே வந்தோம். உனக்கு ஒன்று தெரியுமா..இந்த களக்காடு ஒரு காலத்தில் கள்ளர்கள் காடு என்று இருந்தாம். அப்புறம் மருவிப் போய் களக்காடு என்று ஆகிவிட்டதாம். ஆமாம்..எங்கே.. இங்கே படுத்திருந்த பிரபுவைக் காணோம்" என்றான் வசந்த்.

"அவர் காலையிலே எழும்பி வாக்கிங் போயாச்சு.." என்றான் நரேன்.

கவிஞர் இரஜகை நிலவன்

"விளையாடுறியா. .ஊரே வெளியே போகக்கூடாது என்று வீட்டுக்குள்ளே அடங்கிக்கெடக்கு ..இவரு வாக்கிங்போனாரா?.. "

வசந்த் சிரித்தான். " அதெல்லாம் அவர் பார்த்துப்பார். சும்மா இந்த காம்பவுண்டுக்குள்ளேதான் எங்கேயாவது நடந்துகொண்டிருப்பார். சொல்லு. அவர் கிட்டே விசயத்தை சொல்லணுமா வேண்டாமா?" நரேன். கேட்டான்.

"வந்து ரெண்டு நாள்தானே ஆவுது. போகட்டும் பார்க்கலாம்" என்றான் வசந்த்

"கிழிச்சே, வந்தமா காரியத்தை முடிச்சமாண்ணி இல்லாம. கொரோனாவுக்கு மருந்து கண்டுபிடிக்க போறாராம்" கொஞ்சம் கோபப்பட்டான் நரேன்.

"டேய் அரசாங்கத்திலேயிருந்து சம்பளம் தந்து நம்மள மருந்து கண்டு பிடிக்க அனுப்பி வச்சிருக்காங்க. அத மொதல்ல ஞாபகம் வச்சிக்க. நீ பாட்டுக்கு வந்த உடனே"

"என்னடா வந்த உடனே, சும்மா பூச்சை புடிச்சிக்காட்டாதே" நரேன் கத்தினான்.

உள்ளே வந்த பிரபு," என்னப்பா என்ன விசயம், ஏன் இப்படி கத்தறே.?." என்றார் வியப்பாக.

தான் செய்த தவறை உணர்ந்த நரேன், " அது வந்து சார்.. " என்று வழிவதற்குள்,

"சும்மா குடும்பக் கதை பேசிக்கிட்டிருந்தோம் சார்" என்றான் வசந்த்.

"அது சரி, நான் நேற்று சொன்னேனே.. அந்த சித்தர் பாடலைப் பார்த்தீர்களா? அதற்கு ஏதாவது அர்த்தம் தெரிந்ததா? அந்தப் பாட்டிலேதான் அவர் இந்தக் கொரோனாவுக்கு மருந்து எழுதி வச்சிருக்கார். அந்த வரிய நாம் சரியா புரிஞ்சுகிட்டோமிண்ணா, அப்புறம் காட்டிலே எறங்கி செடியைத் தேடிப் போயிறலாம்..." என்றார் பிரபு.

"அதப் பற்றித்தான் நேற்று இராத்திரி அலசிக்கொண்டிருந்தோம் சார்" என்றான் நரேன்.

"கிழிச்சீங்க, ஏன் தம்பி பொய் சொல்றீங்க.. நேற்று இராத்திரி முழுவதும் தண்ணி அடிச்சிக்கிட்டு..தேவையில்லாத வேலையெல்லாம் செய்துகிட்டிருக்கீங்க..வந்து நாலு நாளாச்சு..இந்த அரசு விருந்தினர் மாளிகையிலே சும்மா கொட்டம் அடிக்க வரல்லேங்கறதை நல்லா

## மயிலின் இறகின் நிறமாக

## அத்தியாயம் -1

(புதினம்)

இருவரும் அமைதியாக கைகளில் டீ கோப்பைகளுடனின்று கொண்டிருந்தனர்..

" சரி போய் குளிச்சி முடிச்சிட்டு வேலையினைப் பாருங்க.. ஆமா எனக்கு டீ எடுத்துட்டு வரலையா கண்ணன்" என்று பிரபு கேட்க, "அங்கே பிளாஸ்கிலே வச்சிருக்கான் சார்" என்றான் நரேன்.

"அந்த வாட்ச்மேன் கண்ணன் வந்தா வரச் சொல்லுங்க.அவன் தானே உங்களுக்கு தண்ணி வாங்கித் தந்தது?" என்று கடிந்தவாறு உள்ளே சென்றார்.

நரேனும் வசந்தும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டே உள்ளே சென்றனர். இருவரும் குளித்து விட்டு புறப்பட்டு ஆபீஸ் அறைக்கு வந்த போது பிரபு கூகிளில் எதையோ தேடிக்கொண்டிருந்தார்.

"வாங்க.. கண்ணன் டிபன் வாங்கி வச்சிருக்கான். சீக்கிரம் சாப்பிட்டு விட்டு வேலையை ஆரம்பிங்க..அந்த சித்தர் பாடலை கொஞ்சம் ஆழமா படிச்சி பாருங்க..கொரோனாவுக்கு எந்த மூலிகை மூலம் மருந்து கிடைக்கும்னு பாருங்க"என்றார்.

இருவரும் பார்சலிலிருந்த பூரியை ருசி பார்த்து விட்டு.. டீ அருந்தினர்.

"சார். நேற்றே நான் சொன்னது ஞாபகம் இருக்கா ..நாம் வந்த அந்த நடை பாதையில் ஒரு செடி வித்தியாசம இருந்ததை சொன்னேனே, கொஞ்சம் அந்த செடியை பார்க்கலாமா? என்றான் நரேன்.

"ஆங், நேற்று நீ சொன்னத மறந்தே போனேன்..ஒண்ணு பண்ணு.. நீ போய் அந்த செடியின் ஒருகொப்பை அத்துட்டுவா:" என்றார் பிரபு " ரெண்டு பேருமே போய்ட்டு வாரோமே..." என்றான் வசந்த்

" சரி சரி சீக்கிரம் வாங்க" என்றார் பிரபு

நரேனும் வசந்தும் வெளியே வந்து சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு, நடந்தனர்.

'இதுக்காடா இவ்வளவு ப்ளான் போட்டு இங்கே வந்தோம்" சலித்துக் கொண்டான் நரேன்.

" எல்லாத்துக்கும் அவசரப்படுற, உன்ன என்ன செய்றது?.. கொஞ்சம் பொறுமையாய் இரு..." என்றான் வசந்த்

"சரி.. உன் ப்ளான்தான் என்னது? அதையாவது சொல்லித் தொலை"

கவிஞர் இராஜகை நிலவன்

திரும்பவும் சலித்துக் கொண்டான் நரேன்.

"டேய் நாம் இங்கே புதையலைத் தேடி வந்திருக்கிறோம் என்பது நம்மள தவிர யாருக்கும் தெரியாமல் இருப்பது தான் நமக்கு நல்லது.. குறிப்பா அந்தப் பிரபுவிற்கு... நாளைக்கு அந்த சித்தர் பாடலிலிருந்து மூலிகையினை கண்டுபுடிச்சாச்சுன்னு சொல்லிக்கிட்டு அந்த கண்ணனையையும் கூப்பிட்டுட்டு காட்டுக்குள்ளே கிளம்பிற வேண்டியதுதான். " சொன்ன வசந்தின் கண்களில் வேகம் தெரிந்தது.

"அதுவும் சரிதான் " என்றான் நரேன். காட்டிலே எந்த இடம் என்பதை நீதெரிந்துகொண்டாயா? இல்லை, கவிதாவின் போனுக்காக காத்திருக்கின்றாயா? கவிதா நேற்று போன் பண்ணும்போதுகூட அவ்வளவு தெளிவா எந்த பதிலும் சொன்னா மாதிரி தெரியலியே..." என்று தொடர்ந்தான் நரேன்.

பார்க்கலாம் ..எதற்கும் அவசரப்படாதே" என்றவாறு ஒருசெடியின் கிளையை முறித்துக் கொண்டு கிளம்பினான் வசந்த்.

தொடரும்...

# மாமருந்து

## கட்டுரை

**ஆரோக்கியம், அறிவு மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கான அத்தியாவசிய மருந்து தூக்கம்**



மனித வாழ்க்கையில் நாம் தவிர்க்க முடியாததும், தானாக விடுபட இயலாததுமான அடிப்படைச் செயல்பாடுகளில் ஒன்றுதான் தூக்கம். எனினும், இன்றைய நவீன காலகட்டத்தில், நமது வாழ்க்கை முறை மாற்றங்களால் தூங்கும் நேரங்கள் குறைந்து கொண்டே வருகின்றன. ஒரு சராசரி மனிதன் ஆரோக்கியமாக வாழக் குறைந்தது ஏழு மணி நேரமாவது உறங்க வேண்டும் என்று சுகாதார நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர். ஆனால், மற்ற விடயங்களுக்குக் காட்டும் முக்கியத்துவத்தை யாரும் தூக்கத்திற்குக் காட்டுவதில்லை.

"ஓய்வு நேரம் தானே, அதை விட நம் வேலை தானே முக்கியம், தூங்காவிட்டால் என்ன ஆகிவிட போகிறது?" என்ற அலட்சிய மனப்பான்மையுடன், தூங்க வேண்டிய நேரத்தில் தூக்கத்தைத் தவிர்த்து, வேறு வேலைகளில் ஈடுபட்டு, மிகவும் தாமதமாகத்தான் உறங்குகின்றனர். தூக்கம் என்பது வெறுமனே உடலின் ஓய்வு நேரம் மட்டுமல்ல அது நம் ஆரோக்கியம், அறிவுத்திறன் மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்விற்கான மிக அத்தியாவசியமான செயல்முறையாகும்.

நிம்மதியான தூக்கத்தின் போதுதான் நம் உடலும் மூளையும் தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்கின்றன. குறிப்பாக, நாம் விழித்திருக்கும் போது மூளையில் சேரும் தேவையற்ற மற்றும் நச்சுப் பொருட்களை (Metabolic Waste) அகற்றும் பணியைத் தூக்கத்தின்போதுதான் மூளை மேற்கொள்கிறது. இந்த நச்சுப் பொருட்கள் அகற்றப்படாவிட்டால், மூளையின் செயல்பாடு பாதிக்கப்படும்.

கவிஞர் ரீஸ்னா ரம்ஸான், கண்டி, அக்குறணை (இலங்கை)

குறிப்பாக, ஆழ்ந்த உறக்கத்தின்போது, அன்றைய தினம் நாம் கற்றறிந்த தகவல்கள் மற்றும் நினைவுகள் அனைத்தும் ஒழுங்குபடுத்தப்பட்டு, நீண்ட கால நினைவுகளாகப் பதிய வைக்கப்படுகின்றன. போதுமான தூக்கம் இல்லாவிட்டால், கவனம் செலுத்துதல், முடிவெடுத்தல், புதியன கற்றல் போன்ற அறிவாற்றல் செயல்பாடுகளில் சிக்கல் ஏற்படும். ஆரோக்கியமான உடலுக்கும், கூர்மையான அறிவுக்கும் தூக்கம் இன்றியமையாதது என்பதை நாம் உணர வேண்டும்.

தூக்கமின்மையானது மனச்சோர்வு, நோய் எதிர்ப்பு சக்தி குறைவது போன்ற பல்வேறு உடல்நலக் குறைபாடுகளுக்குக் காரணமாக அமைகின்றன. தூக்கத்தின்போது உடல் தன்னைத்தானே சீரமைத்துக் கொள்வதால், நோய் எதிர்ப்பு சக்தி உருவாகிறது. உடல் செல்களின் பழுதுபார்ப்பு மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான வளர்ச்சி ஹார்மோன்கள் (Growth Hormone) அதிக அளவில் சுரக்கின்றன. மேலும், நோய்த்தொற்றுகளை எதிர்த்துப் போராடும் நோய் எதிர்ப்பு மண்டலத்தின் வலிமைக்குத் தூக்கம் மிக அத்தியாவசியமானது.

தூக்கமின்மை தொடரும்போது, இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் இருதய நோய்கள் ஏற்படுட வாய்ப்புகள் அதிகம் எனவே, தூக்கம் என்பது வெறும் ஓய்வெடுக்கும் நேரம் மட்டுமல்ல; அது உடலின் உள்கட்டமைப்புப் பணியை மேற்கொள்ளும் முக்கிய நேரமாகும்.

மனநலமும் தரமான தூக்கமும், மனச்சோர்வு, பதட்டம் மற்றும் மன அழுத்தத்தைக் குறைப்பதில் தரமான தூக்கம் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஆழ்ந்த உறக்கமானது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் மூளையின் திறனை மேம்படுத்துகிறது. இதனால், நாம் உணர்வுரீதியாக நிலைத்தன்மையுடன் செயல்பட முடிகிறது.

தூக்கம் குறையும்போது, மனநிலை சீர்குலைந்து, எரிச்சல், சோர்வு மற்றும் மனச்சோர்வு போன்ற உணர்வுகள் மேலோங்கி, மன ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, மனரீதியான ஆரோக்கியத்திற்கும், உணர்ச்சி சமநிலைக்கும் நிம்மதியான மற்றும் தரமான தூக்கம் மிகவும் அவசியம்.

கவிஞர் ரூஸ்னி ரூம்ஸான், கிண்ணியா, அக்குறணை (இலங்கை)


நாம் வேலையில் காட்டும் அதே முக்கியத்துவத்தைத் தூக்கத்திற்கும் காட்ட வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும். தினசரி நம்முடைய வேலைகளைத் திட்டமிடும்போதே, ஏழு முதல் எட்டு மணி நேரம் தரமான தூக்கத்திற்கான நேரத்தை ஒதுக்க வேண்டியது மிக மிக அவசியம்.

தூக்கம் என்பது நேரத்தை வீணாக செலவழிப்பது இல்லை. அது ஆரோக்கியம், அறிவு மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கான சிறந்த மருந்து என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து, சரியான நேரத்தில் உறங்கி, உடல் மற்றும் மன ஆரோக்கியத்தைக் காப்பது இன்றைய நவீன வாழ்க்கையில் மிகவும் முக்கியமானதாகும்.



கவிஞர் ரீஸ்னா ரமீஸான், கண்டி, அக்குறணை (இலங்கை)

பகையில்லா உறவின் தாக்குதல் — குற்ற உணர்ச்சி — 02



சகமனிதன் வாழ்க்கையில் எதிரியைக் காண்பதைவிட, நம்மை நன்கறிந்தவர்களால் நிகழும் செயல் மாற்றம்தான் மிகக் கொடுமையானது. பிறந்த நாளிலிருந்தே பாசம், நேசம், அக்கறை என உறவுகளால் சூழப்பட்ட ஒருவன், நட்பில் கலந்து உருவாகும் உறவுகளில்தான் உண்மையான ஓய்வை உணர்கிறான். யாராயினும், தன் உயிரான உடன் பிறவா உறவுகளுக்குப் பின் அந்த உறவையே அடிமையாகப் பிடித்துக் கொள்வார்கள்.

ஆனால் நம்மை நெருங்கிய ஒருவரான — உடன்பிறவா சகோதரியோ, நண்பனோ, நண்பியோ — நம் மீது பாசத்தோடு உரிமையோடு நடக்கும் போது, அது நமக்கு ஒரு பெரும் நிம்மதியாக தோன்றும்.
நாளடைவில் அந்த உரிமை நம் வாழ்வின் ஓர் பகுதி ஆகி விடும். அதனால் நம்மில் ஒளிவற்ற தன்மை பிறக்கும்; நம்பப்பட்ட உறவிடம் சொல்லாமல் விடுவதே ஒரு குற்றமென மனம் எண்ணத் தொடங்கும். அதனால் எதையும் மறைக்காது தாராளமாக உளறி வைப்போம்.

பெண் மனம், ஆணின் மனதைவிட உணர்ச்சியில் ஆழமானது. அவளால் தம்மோடு நட்பு பாராட்டும் ஒருவரின் உறவின் நோக்கத்தை ஊகித்து உணர முடியும். அதனால் அவள், அந்த உறவை தள்ளி நிறுத்தி, "யாருக்கும் துன்பம் வரக்கூடாது" என்ற எண்ணத்தோடு தன்னைப் பின்வாங்கிக் கொள்வாள்.ஆனாலும் நேசித்த உறவை முற்றாக மறந்து போகமாட்டாள்.

அந்தப் பின்வாங்கலில்ஏதொன்று காரணமாக இருக்கும். இயல்பு ஒற்றாமல் போகும். உரிமையற்ற உறவுகளாக மாறும்போது, மனம் சிதறத் தொடங்கும்.

கவிஞர் சஹீனாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

தேடல் - 06

சிறு உரிமை பிரசனைகள், கருத்து வேறுபாடுகள், அசௌகரியங்கள் — அனைத்தும் பயபந்தை விதைக்கும். அது escalating நிலைக்குச் சென்றால், தொடக்கத்தில் ஏற்பட்ட தாக்குதல்கள், இடையிலான சண்டைகள், பின்னர் குற்றச்சாட்டுகள் என உறவு முற்றிலும் விலகி விடும்.

அந்தச் சண்டைகளில் நம்மால் பகிரப்பட்ட இரகசியங்கள் "குற்றமாக" மாறினால், வார்த்தைகள் மனத்தில் துளையிட்டு காயப்படுத்தும். "நான் இதைச் செய்தது தவறா?" என்ற கேள்வி நம்மை வதைக்கும். அன்பு வீணாகி, மானம் மிதந்துவிட்டால், மனம் மன்னிப்பை யாசிக்கும். ஆனால் மன்னிப்பு கேட்கத் துணிந்தாலும், மனம் பயந்து பின்வாங்கும்.

உங்களோடு இருந்தவர் நம்பிக்கையோடு சொன்ன துன்பமான சம்பவங்களை மீண்டும் குற்றச்சாட்டாகச் சொல்லாதீர்கள். அவற்றை மீண்டும் தூண்ட வேண்டாம். அப்படிச் செய்வது நம்பிக்கையை முற்றிலும் அழிக்கும்.

நம்பிக்கையை இழந்த பின் அதை மீண்டும் புதுப்பிக்க முடியாது என்பதை உணருங்கள். பாசத்தால் கரையும் மனம், வெறுப்பால் தாங்க முடியாது. அதனால் "இந்த உறவு மீண்டும் பழைய சாயலை அடையுமா?" என்ற கேள்வி நம் உள்ளத்தைக் கடிக்கும். துடிக்கும் மனம் இவர்களையா போயும் போய் பாசம், நேசம் வைத்தோம் அக்கறை செலுத்தினமோ என மனம் கிடந்து அடிக்கும்.

மறைத்து வைக்க நினைத்திட சொல்லியவைகளை பரத்திவிட்டு சம்மந்தமே இல்லாது போன்று குற்றமின்றி நிற்பவர்களை நினைத்து.மனம் விரைத்து போனாலும் மருந்துக்கும் மனம் கொண்ட வலி அகழவே அகழாது. அன்பினை யாராலும் நிரப்பவும் முடியாது. கொண்ட அன்பை தவிர்த்து வெறுப்பை அழிக்க நினைத்தால் அவை தம்மை பொய்ப்பித்ததை நினைத்தே வருந்தி தொலைக்கும்.


கவிஞர் சஹீனாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

சுருக்கமாக நினைக்க வேண்டியவை:

மனம் பாதிக்கப்பட்டவரை கேளுங்கள்; குற்றச்சாட்டை வெளிப்படையாகக் கூற வேண்டாம்.

அதே காயத்தைத் தூண்டும் உரைகளைத் தவிருங்கள்.

நம்பிக்கையை மீட்டெடுக்க மாற்றத்தின் நடைமுறைகள் பற்றி பேசுங்கள். உண்மையான மன்னிப்பும் செயல் திருத்தமும் இல்லையெனில், தூரம் கொடுத்து மனதை காத்திடுங்கள்.



தேடலாகும்...

கவிஞர் சஹீனாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

# உறவின் மாறாட்டம்

## நூல் அனுபவம்




சிறுகதைத் தொகுப்பு; இரஜகை நிலவன்
முதல் பதிப்பு ஏப்ரல் 2025; பக்கம் 152
விலை ரூபாய் 170; வெளியீடு புஸ்தகா

**எழுத்தெனும் தேரில் உணர்வுகளின் பவனி. அனுபவங்களின் தொகுப்பு கதைகளாக உருமாறுகின்றன. சிலருக்கு காணும் சம்பவங்களின் நீட்சியும் அவை தரும் எதிரொளிப்பும் கதைகளாக மாறுகின்றன. கதைகளைக் கேட்டு கதைகளோடு வளர்ந்தவர்கள் நாம். நமது முன்னோர்களின் வாழ்வியலில் இருந்து கதைகளோடு பயணப்பட்ட நாம் நமது வாழ்வின் நகர்வுகளுக்கும் கதைகளையே பயன்படுத்திக் கொள்கிறோம்.

அறிவியல் வளர்ச்சியும் அவை பெற்றுத் தந்த கருவிகளும் இன்று ஊடகங்கள் வழியாகவும் தகவல் தொடர்புகளின் வழியாகவும் எத்தனையோ மாற்றங்களை ஏற்படுத்தினாலும் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல் சிந்தனைகளும் அறச் செயல்பாடுகளும் நீதி உணர்வு உறவுகள் மீதான பற்று அன்பு பாசம் போன்றவற்றை இன்னும் கதைகளின் வழியாகவே அடுத்த தலைமுறைக்கு கடத்திக் கொண்டிருக்கிறது.

சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது என்ற அடிப்படையில் இந்தத் தொகுப்பில் சுமார் 30 சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு சிறுகதைகளும் மன உணர்வுகளை அழகாக வெளிப்படுத்துகின்றன. எவ்வித தங்குதடையுமற்ற எழுத்து நடையில் நம்மை ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை இழுத்துச் செல்லும் கதையோட்டம் கதைகளை வாசிப்பதற்கு எளிமையாக்கி விடுகிறது.

கவிமலர் இளையவன் சிவா

## நூல் அனுபவம்


ஒவ்வொரு கதைகளும் ஆரம்பித்த விதம் ஒன்றாக இருக்க திடீரென்று ஏற்படும் கொண்டை ஊசி வளைவுத் திருப்பத்தை போல கதையின் முடிவு நம்மை ஆச்சரியப்படுத்தும்படி மாறிவிடுகிறது. அத்தகு கதைகளாலான இந்த நூலை வாசிக்கும் போது சிந்தனை ஓட்டமும் எண்ணமும் கதைகளோடு பயணிப்பதை தவிர்க்க முடியவில்லை.

கதைகள் என்பது உண்மைச் சம்பவங்களின் ஆதாரத்தைக் கொண்டு கட்டி எழுப்பப்படும் கோட்டையாகவும் இருக்கலாம். காணும் காட்சிகளின் வழியே நமக்குள் எழும் சிந்தனைகளை வகைப்படுத்தி எழுதப்படும் தொகுப்பாகவும் இருக்கலாம். கட்டுரைத் தன்மை வரவிடாமல் நம்மை கதைகளாகவே மாற்றிவிடும் பாங்கும் இந்த கதைகளுக்குள் ஒளிந்திருக்கிறது.

சமூகத்தின் அடிப்படையான செயல்பாடுகளாக ஒவ்வொரு தனி மனிதனும் தனது உணர்வுகளின் வழியே பொதுநலத்தைப் பேணுவதில் கவனம் கொள்ள வேண்டும் என்பதை கதைகள் கோடிட்டுக் காட்டுகின்றன. பெண்களின் மீதான மரியாதை மதிப்பு குடும்ப உறவுகள் மீதான பற்று தாய் நாட்டின் மீதான நேசம் என கதைகள் பல்வேறு தளங்களில் நின்று நம் உணர்வுகளுக்குள் புதிய புதிய எண்ணங்களை உருவாக்கி விடுகின்றன. இத்தகு கதைகள் குறும்படங்களாக எடுப்பதற்கான சாத்தியக்கூறுகளை அதிகப்படுத்தி விடுகின்றன. எளிமையான கட்டமைப்பும் இயல்பான உரையாடல்களும் நம் அருகாமையில் நடக்கும் நிகழ்வுகளை நம் கண் முன்னே காட்டும் சித்திரங்களாக மாற்றி விடுகின்றன. நிகழ் கால சம்பவங்களும் அதன் வழியே எதிர்காலத்தைக் கட்டமைக்கும் உறுதியும் வெளிப்படுத்தும் கதைகள் உணர்வுகளை முழுமையாக வெளிப்படுத்தி அவையே மனிதனின் வாழ்விற்கான ஆதாரம் என்பதை நிரூபிக்கின்றன

சுதந்திர நாட்டில் இன்னும் மக்களுக்கான விடுதலை கிடைக்கவே இல்லை என்ற ஏக்கமும் கோபமும் நிறையக் கதைகளில் வெளிப்பட்டு விடுகிறது. மன வக்கிரத்தையும் அவலத்தையும் சொல்லும் கதைகளும் இதில் இடம்பெற்றுள்ளன. கணவன் மனைவி உறவு குழந்தையின்மையால் ஏற்படும்

மன நெருக்கடி நாட்டுப்பற்று கடமையைச் செய்யாத கயவர்களால் ஏற்படும் விபரீதங்கள் ஒழுக்கம் தவறுவதால் நேரும் அவலங்கள் என அறச்சிந்தனைகளையும் ஒழுக்கக் கோட்பாடுகளையும் இந்தக் கதைகள் அறியத் தருகின்றன. அவ்வப்போது எழும் கட்டுரைத் தன்மையை கொஞ்சம் குறைத்துக் கொண்டு இன்னும் கதைகளின் நகர்வுகளை வடித்திருந்தால் உறவுகளின் மாறாட்டம் நமக்குள் உறவுகளின் மீதான பற்றுதலையும் பந்தத்தையும் தொடர வைப்பதில் சிறப்பான பங்களித்திருக்கும்.




கவிமலர் இளையவன் சிவா



தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் (1879) பிறந்தார். இயற்பெயர் சத்தியானந்த சோமசுந்தரன். எட்டயபுரம் அரசியின் பராமரிப்பில் வளர்ந்தார். அரண்மனையில் பணியாற்றிவந்த சுப்பிரமணிய பாரதிக்கு நண்பரானார். இருவரும் இணைந்து பல நூல்களைக் கற்றனர். பாடல்கள் இயற்றினர். அரண்மனைக்கு வந்திருந்த ஈழப்புலவர் ஒருவர், இவர்கள் இருவருக்கும் 'பாரதி' என்ற பட்டத்தை வழங்கினார்.

எட்டயபுரத்திலும், நெல்லை சிஎம்எஸ் கல்லூரி பள்ளியிலும் பயின்றார். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பி.ஏ. பட்டப் படிப்பையும், சென்னை சட்டக் கல்லூரியில் இளநிலை சட்டப் படிப்பையும் முடித்தார்.

வழக்கறிஞராகப் பணியாற்றிக்கொண்டே, முதுநிலை சட்டம் படித்து பட்டம் பெற்றார். சிறந்த வழக்கறிஞர் என்று புகழ்பெற்றார். ஆயிரக்கணக்கில் சம்பாதித்தவர் அதை விட்டுவிட்டு, வ.உ.சி.யின் அழைப்பை ஏற்று ரூ.100 சம்பளத்தில் அவரது சுதேசிக் கப்பல் கம்பெனியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார்.

ஒத்துழையாமை இயக்கம், தீண்டாமை ஒழிப்பில் காந்தியடிகளைப் பின்பற்றியவர். நெல்லை, மதுரையில் காங்கிரஸ் கட்சி மாநாட்டைத் தலைமை ஏற்று நடத்தினார். 'என்னிடம் 2 சரக்கு கப்பலோடு, 3-வதாக ஒரு தமிழ்க் கப்பலும் உள்ளது' என்று வ.உ.சி. பெருமிதத்துடன் இவரைக் குறிப்பிடுவார். வ.உ.சி., சுப்பிரமணிய சிவா மீதான வழக்குகளில் அவர்களுக்காக வாதாடினார்.

காந்தியடிகளை முதன்முதலில் தமிழகத்துக்கு வரவழைத்து உரையாற்றச் செய்தார். தன் குடும்பத்தினரையும் விடுதலை இயக்கத்தில் பங்குபெறச் செய்தார். சுதந்திரப் போராட்டத்துக்கு நன்கொடையாக, குழந்தைகளின் நகைகளைக் கழற்றி காந்தியிடம் அளிக்கச் செய்தார். இந்தி எதிர்ப்பு மாநாடுகளில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராக பணியாற்றினார். தமிழ் இலக்கண, இலக்கிய ஆய்வுகளில் ஈடுபட்டார். தமிழ்க் கழகம் என்ற அமைப்பை நிறுவினார். 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்', 'அழகு', 'சேரர் தாயமுறை', 'தமிழும் தமிழரும்', 'திருவள்ளுவர்' உட்பட பல நூல்களையும், 5 ஆங்கில நூல்களையும் எழுதியுள்ளார். தமிழ் இலக்கண இலக்கி யங்கள், அரசியல், வரலாறு, தமிழர் நாகரிகம், பண்பாடு, மொழி பெயர்ப்பு என நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார்.




தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகியவற்றுக்கு உரை எழுதினார். 'நான் கண்ட சுப்பிரமணிய பாரதி' என்ற நூலை எழுதினார். மதுரை அடுத்த உசிலங்குளத்தில் தாழ்த்தப்பட்டோருக்கான தொடக்கப்பள்ளியை நிறுவினார்.

இவரது தமிழ்த் தொண்டைப் பாராட்டி ஈழநாட்டுப் புலவர் மன்றம் 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கியது. திருவள்ளுவர் கழகம் 'கணக்காயர்' என்ற பட்டத்தையும், அண்ணாமலை பல்கலைக்கழகம் கவுரவ டாக்டர் பட்டத்தையும் வழங்கியது.

நூல்கள்

- தசரதன் குறையும் கைகேயி நிறையும் (1926)
- திருவள்ளுவர் (1929) - தமிழ், ஆங்கிலம்
- சேரர் தாயமுறை (1960) - தமிழ், ஆங்கிலம்
- தமிழும் தமிழரும்
- சேரர் பேரூர் (1917) - தமிழ், ஆங்கிலம்
- அழகு
- பழந்தமிழ் நாடு (1955)
- நற்றமிழ் (1957)
- Tamil Classics and Tamilakam (1912)
- படைப்பிலக்கியங்கள்
- மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி: ஒரு செய்யுட் கதை (1947)
- மாரி வாயில் (1936)

உரைநூல்

- இந்தி கட்டாய பாடமா?
- வாழ்க்கை வரலாறு
- நான் கண்ட சுப்பிரமணிய பாரதி

சமூக சீர்திருத்தங்களில் ஈடுபாடு கொண்டவர். சடங்குகள் இல்லாத திருமண விழாக்களை முன்னின்று நடத்தினார். தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தின் மதுரை மாவட்டத் தலைவராக செயல்பட்டார். தமிழுக்கும், தமிழ் சமுதாயத்துக்கும் அருந்தொண்டுகள் ஆற்றிய நாவலர் சோமசுந்தர பாரதியார் 80 வயதில் (1959) மறைந்தார்.

நன்றி
https://www.hindutamil.in/
https://tamil.wiki/wiki/

# நாளை நமதே

விழுந்து விடுவேன் என்ற
பயத்துடன் ஓடாமல்
விழுந்தாலும் எழுந்து ஓடுவேன்
என்ற நம்பிக்கையில் ஓடுங்கள்
வாழ்க்கையில் தடுமாற்றமே இருக்காது

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே    முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு    அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு    சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை